பென்னிகுக் வரலாறு, பெரியாறு அணை கட்டுமானம்

# பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

▶ லோயர் கேம்ப் மணி மண்டபத்தில் உள்ள பென்னிகுக் முழு உருவ வெண்கல சிலை.

**கூடலூர், ஜன.19:** பெரியாறு அணையை கட்டிய கர்னல் ஜான் பென்னிகுக் வாழ்க்கை வரலாற்றை, தமிழ்நாடு அரசு பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என தென்மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரமாக பெரியாறு அணை உள்ளது. இந்த அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுக் வாழ்க்கை வரலாற்றை, அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் விதமாக தமிழ்நாடு அரசு பாடத்திட்டத்தில், அவரது வரலாறு மற்றும் அணை உருவான வரலாற்றை சேர்க்க வேண்டும் என்பது தென் தமிழகப் பகுதி மக்கள் மற்றும் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

தென் மாவட்டங்கள் இன்று பசுமையாக காட்சியளிக்கிறது என்றால் அதற்கு காரணம் பெரியாறு அணை. இந்த அணையின் கட்டுமானம், அதனுடைய அன்றைய தொழில்நுட்பம், அனைத்தும் இன்றைய நீரியல் விதிகளுக்கு சவால் விடும் வகையில் உள்ளது. இன்றைய இளம் தலைமுறையினர் அணையினுடைய வரலாற்றைப் பற்றி தெரிந்து கொள்ளவும் வேண்டும். இன்றைய நிலையில் சுமார் ஒரு கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குவதற்கு அடிப்படையாக உள்ள அணையின் வரலாற்றை, பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என பதிவு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடமலைக்குண்டு அருகே

# சிக்னல் விளக்குகள் பழுது

## சீரமைக்க கோரிக்கை

**வருசநாடு, ஜன.19:** கடமலைக்குண்டு அருகே சாலைகளில் உள்ள சோலார் சிக்னல் விளக்குகளை சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடமலை மயிலை ஒன்றியத்தில் கண்டமனூர், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, ஓட்டனை போன்ற பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளில் சோலார் விளக்குகள் நெடுஞ்சாலைத் துறையினரால் அமைக்கப்பட்டன. இந்நிலையில் சில இடங்களில் உள்ள சோலார் சிக்னல் விளக்குகள் பழுதாகியும், சில இடங்களில் சோலார் விளக்குகள் திருடப்பட்டும் உள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் கூறுகையில், சோலார் சிக்னல் விளக்குகள் சாலைகளில் முறையாக எரிந்து கொண்டிருந்தன. அப்பொழுது விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை. கடந்த சில மாதங்களாகவே சோலார் விளக்குகள் சில இடங்களில் பழுதாகி உள்ளது. சில இடங்களில் சோலார் பேனல்களை காணவில்லை. இதனால் சிக்னல் விளக்குகள் இல்லாமல் வாகன விபத்துகள் நடக்கின்றன. ஆகையால் கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள சாலைகளில் சோலார் சிக்னல் விளக்குகளை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# மாநில கபடி போட்டி

▶ மயிலாடும்பாறை அருகே நரியூத்து கிராமத்தில் மாநில அளவிலான கபடி போட்டி நடைபெற்றது.

கம்பத்தில்

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

▶ கம்பத்தில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆசிரியர்களுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

**கம்பம், ஜன.19:** கம்பம் ஸ்ரீமுத்தையா பிள்ளை நினைவு மேல்நிலைப் பள்ளி 1998-99 கல்வியாண்டில் 10ம் வகுப்பு படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி, பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

பள்ளி தாளாளர் மகுடகாந்தன் தலைமை தாங்கினார். கம்பம் நாக மணியம்மாள் மெட்ரிக் பள்ளி தாளாளர் காந்த வாசன் மற்றும் முன்னாள், இந்நாள் ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர். இதில் 130 மாணவர்கள், பள்ளி சீருடையில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், பள்ளி பருவத்தில் நடந்த நிகழ்வுகளை ஆசிரியர்களும் மாணவர்களும் பகிர்ந்து கொண்டனர். பின்னர் ஆசிரியர்களுக்கு நினைவு பரிகள் வழங்கி பாராட்டினர். தொடர்ந்து அனைவரும் புகைப்படம் எடுத்து கொண்டனர். முன்னதாக முன்னாள் ஆசிரியர்களை வரவேற்கும் விதமாக சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டு ஆசிரியர்களை மாணவர்கள் தங்களது தோளில் தூக்கி, மலர் தூவி மேளம் தாளம் முழங்க ஆடி பாடி உற்சாகமாக வரவேற்றனர். பின்னர் மறைந்த பள்ளி தாளாளர்கள், ஆசிரியர்கள் , மாணவர்களின் புகைப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தினர். இதில் மறைந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் புகைப்படங்களை ஏஐ தொழில்நுட்பம் மூலம் பேசுவது போன்ற வீடியோ ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதனை பார்த்த சக ஆசிரியர்கள், மாணவர்களை மெய்சிலிர்க்க வைத்தது குறிப்பிடத்தக்கது. முடிவில் ஆசிரியர் சோமநாதன் நன்றி தெரிவித்தார்.

# அந்தோணியார் ஆலய திருவிழா தேர் பவனி

## ஏராளமானோர் பங்கேற்பு

**திண்டுக்கல், ஜன. 19:** திண்டுக்கல் மறைமாவட்டத்தில் 300 ஆண்டுகள் வரலாற்று சிறப்புமிக்க மாரம்பாடி புனித பெரிய அந்தோணியார் தேவாலயம் உள்ளது.

இங்கு ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்கள் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். அந்த வகையில் இந்த ஆண்டு திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் துவங்கியது. தொடர்ந்து நேற்று மாலை 6:30 மணிக்கு புனிதரின் ஆடம்பர திருவிழா திருப்பலியினை திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர் தாமஸ் பால்சாமி நிறைவேற்றினார். பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு புனிதரின் சொரூபங்கள் விசுவாச வளாகத்தில் உள்ள உயிர் தாண்டவர் கெபிக்கு எடுத்து சென்று அங்கு தேரடி திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து மின் தேர் பவனி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. நேற்று மதியம் 3 மணிக்கு பகல் தேர் பவனி நடைபெற்றது. இந்த தேரில் உயிர் தாண்டவர், ஆரோக்கிய மாதா, மெக்கேல் அதிதூதர், சவேரியார், ராயப்பர், புனித பெரிய அந்தோணியார் ஆகியோரது சொரூபங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இதில் திண்டுக்கல் மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான இறை மக்கள் கலந்து கொண்டு இறையருள் பெற்று சென்றனர். இதற்கான ஏற்பாடுகளை திருத்தல பங்கு தந்தை சுரேஷ் சகாயராஜ், உதவி பங்கு தந்தை அமல்ராஜ் மற்றும் ஊர் பெரியதான காரர்கள், அமலவை கன்னிமார்கள், மாரம்பாடி பங்கு இறைமக்கள் செய்திருந்தனர்.

# மக்காச்சோளம் சாகுபடி தீவிரம்

▶ ஆண்டிபட்டி அருகே உள்ள கரிசல்பட்டியில் மக்காச்சோளம் சாகுபடி நடந்து வருகிறது.

# மா சாகுபடியில் அதிக மகசூல் பெற வாய்ப்பு

## வேளாண் துறையினர் வழிகாட்டல்

**ஆண்டிபட்டி, ஜன.19:** மாமரங்களில் அதிக மகசூல் பெற கவாத்து அவசியமென வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

தேனி மாவட்டத்தில் அதிக ஏக்கர் பரப்பளவில் மா பயிரிடப்பட்டுள்ளது. மா பல சத்துக்கள் நிறைந்த பழப்பயிராகும். தேவையான உரங்களை தக்க சமயத்தில் அளித்து நன்கு கவனித்தால் நல்ல மகசூல் கிடைக்கும்.

இந்நிலையில் மா மரத்தில் ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் கவாத்து செய்தல் தொடர்பாக வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது:

கவாத்து என்பது பக்க கிளைகளை வெட்டி ஒழுங்குபடுத்துவதாகும். கவாத்து செய்வதன் மூலம் புதிய கிளைகள் மற்றும் பூ மொட்டுக்களை துளிர்க்க செய்து அதிக மகசூலை பெற முடியும். மாமரத்தில் கவாத்து செய்வதை வயதின் அடிப்படையில் 3 பிரிவுகளாக பிரிக்கலாம். ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மா மரங்களில் கவாத்து செய்யப்பட வேண்டும். முதன்முறையில் குறுக்கும் நெடுக்குமாக உள்ள கிளைகள், ஒன்றுக்குள் ஒன்றாக செல்லும் கிளைகள், நோய் தாக்கிய மற்றும் காய்ந்த கிளைகள் வெட்டப்பட வேண்டும். இவ்வாறு கிளைகளை சீரமைப்பதன் மூலம் சூரிய வெளிச்சம் மற்றும் காற்று உள்ளே உள்ள கிளைகளுக்கு கிடைக்கும். இதனால் மரம் நன்றாக வளர்ந்து பூ பூத்து காய் பிடிக்க ஏதுவாகிறது.

இம்முறையில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கவாத்து செய்தால் போதும். 2வது முறையில் மரத்தின் மேல்பரப்பில் உள்ள நெருக்கமான தண்டுகளை குறைத்து சூரிய ஒளியை நன்கு உட்புக செய்வதன் மூலம் பூத்தல், காய்த்தல் போன்ற தாவர செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பொதுவாக நன்கு விளைச்சல் தரும் மாமரங்களில் 25% கடந்த வருட கிளைகளை நீக்க வேண்டும்.

வயதான மற்றும் உற்பத்தி குறைந்த மரங்களில் 30% முதல் 40% கிளைகளை அகற்றுவதால் புதிய கிளைகள் ஊக்குவிக்கப்பட்டு நல்ல மகசூல் கிடைக்கும். 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மாமரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழு உரம், 2.2 கிலோ யூரியா, 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2.5 கிலோ பொட்டாஷ் உரங்களை செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் இடவேண்டும்.

உரத்தை மரத்தின் தண்டு பகுதியில் இருந்து 45 முதல் 90 சென்டிமீட்டர் தூரத்தில் 15 சென்டிமீட்டர் ஆழத்தில் நன்றாக கலந்து இட வேண்டும். எனவே, மாமரங்களை நடவு செய்துள்ள விவசாயிகள் கவாத்து செயல்முறையினை கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு கூறினர்.

நெடுஞ்சாலைகளில்

# விபத்து எச்சரிக்கை பலகை அவசியம்

**தேவாரம், ஜன.19:** தேவாரம் பகுதி சாலைகளில் விபத்துக்கள் ஏற்படும் இடங்களில் எச்சரிக்கை பலகை வைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தேவாரம், போடி, தேனி, ஆகிய ஊர்களுக்கு செல்லும் மாநில நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இச்சாலை வழியே தினந்தோறும் அதிகமான அளவில் கனரக வாகனங்கள், அரசு பஸ்கள், தனியார் பஸ்கள், செல்கின்றன. இச்சாலை வழியே செல்லும் வாகனங்கள் அதிகமாகும்போது, விபத்துக்கள் உண்டாகிறது. இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், சாலையில் விபத்து எச்சரிக்கை பலகை அவசியம் இருக்க வேண்டும். மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆபத்தான இடங்களில், விபத்து எச்சரிக்கை பலகை அதிகம் வைத்திட வேண்டும். இதன்மூலம் அதிக வேகத்தில் செல்லும் வாகனங்கள், வேகத்தை குறைக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே விபத்து எச்சரிக்கை பலகை வைத்து விபத்துகளைத் தடுக்க நெடுஞ்சாலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.


மறைந்த அன்பு நெஞ்சத்தை என்றும் மறக்காமல் இருக்க...

மாபெரும் சலுகை* 25% வரை

காலமானார், கண்ணீர் அஞ்சலி, நினைவு அஞ்சலி விளம்பரங்களுக்கு

சன் குழுமத்திலிருந்து வெளிவரும் எண்ணற்ற வாசகர்களைப் பெற்ற இந்தியாவின் தலைசிறந்த தமிழ் நாளிதழ்

தினகரன்

ஒரு புதிய அனுபவம்

2/2, மேலூர் மெயின்ரோடு, உத்தங்குடி, மதுரை-625107. Email: dknmdu@gmail.com

மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மாவட்டங்களின் அனைத்து அளவு விளம்பரங்களுக்கும் இச்சலுகை உண்டு.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

* தேனி : 9566899666

www.dinakaran.com /dinakarannews /dinakaran_web

*நிபந்தனைகளுக்குட்பட்டது.



GRIHUM HOUSING FINANCE

**க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலக அலகு: 2 ஆவது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண்.P/I/45/4, தேனி-கம்பம் பிரதான சாலை, டீஎன்பிஎச் எதிரில், பழனிச்செட்டிபட்டி.தேனி, தமிழ்நாடு-625531

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு**
**சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின்** இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 19.02.2026 தேதியன்று** மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடன் எண். HL00494100000005004226 செல்லதுரை B, (கடன்தாரர்) ராதிகா C (உப கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.01.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.01.2025 தேதியின்படி ரூ.21,26,407 (ரூபாய் இருபத்தொரு லட்சத்து இருபது ஆறாயிரத்து நானூற்று ஏழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 13.3% வட்டி. | கையக | தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உத்தமபாளையம் துணைப் பிரிவு, கோகிலபுரம் கிராமம், வார்டு எண்.4, வடக்கு தெரு, பழைய கதவு எண். W4/75, தேனி, தற்போது வார்டு எண்.4, தெரு எண்.4 (வடக்கு தெரு), புதிய கதவு எண். W4/61 இல் உள்ள வீட்டின் நான்கு எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. **வடக்கு:** சாலை, **கிழக்கு:** வெள்ளைத் தேவருக்குச் சொந்தமான நிலம், **மேற்கு:** அருந்ததியர் கோவில் **தெற்கு:** சாலை. இந்த எல்லைகளுக்குள் ¾ அடி இடது பக்கத்தின் கிழக்கு பகுதியில் இந்த நிலத்தின் பரப்பளவு 1047.95859 ச.அடியாகும். கிழக்கு மேற்காக வடக்கு பக்கம். 6.6 மீட்டர் அல்லது 21.7843 அடி. இதன் தெற்கு பக்கம் 6.6 மீட்டர் 21.7843 அடி வடக்கு தெற்காக மேற்கு பக்கத்தில் 15.2 மீட்டர்கள் 49.10425 அடியாகும். கிழக்கு பக்கத்தில் 14.6 மீட்டர்கள் அல்லது 47.10803 அடியாகும். மொத்தம் 1047.95859 ச.அடியாகும். மேற்கூறிய நிலத்தில் 1012 ச.அடியில் கட்டப்பட்டுள்ள ஆர்சிசி வீடும் மற்றும் முதல்தளத்தில் 460 ச. அடியில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் உள்ளது. இந்த வீட்டில் கதவுகள், ஜன்னல்கள், எண்.0554401179–ஐ கொண்ட மின்சார இணைப்பும், எண்.34–ஐ கொண்ட தண்ணீர்க் குழாய் இணைப்பும் உள்ளது. நான்கு சுவர்களுக்குள் அடங்கியுள்ள இந்த நிலத்தில் சாக்கடை அமைப்பும் உள்ளது. கழிவறை மற்றும் மழைநீர் செல்லும் வழி உள்ளது. அனைத்து பொது பாதைகளும் உள்ளடங்கியது. இந்த சொத்து முன்னதாக கோகிலபுரம் பஞ்சாயத்து எல்லை, நத்தம் சர்வே எண்.640/10 (பழைய எண்.41/1) இல் உள்ளது. | Rs. 1732836.00/- (ரூபாய் பதினேழு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எட்டுநூற்று முப்பத்தாறு மட்டும்) | Rs. 173283.60/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று மற்றும் அறுபது பைசா மட்டும்) | 18-02-2026 Before 5 PM | 10,000/- | 16-02-2026 (11AM – 4PM) | 19-02-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |
| 2 | கடன் எண். HF0494H21100406 குறிஞ்சி மலர் A, (கடன்தாரர்) அழகேசன் ஆதிமூலம் (உப கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு தேதி: 09.10.2025 மொத்த நிலுவைத் தொகை: 09.10.2025 தேதியின்படி ரூ.9,38,320.00/– (ரூபாய் ஒன்பது லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.35% வட்டி. | கையக | தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார் பதிவு அலுவலகம், கோவிந்த நகரம் கிராமம், அம்பாசமுத்திரம், நத்தம் சர்வே எண்.70/1 எண்ணில் உள்ள மொத்தம் 16 ஏக்கர்கள் 32 சென்ட்கள் பரப்பளவு வார்டு எண்.3, பழைய கதவு எண்.4w/55, புதிய கதவு எண்.120/3w, மேலப்பட்டியில் உள்ள 1175 ச.அடி பரப்பளவு உள்ள வீட்டு மனை உள்ள அளவீடு: கிழக்கு–மேற்கு:25 அடி, தெற்கு–வடக்கு: 47 அடி. இதில் விண்ணப்பதாரர் கட்டியுள்ள தற்போதைய கதவு எண்கள்.102/1w &153/1w இல் உள்ள வீடு மின்சார வாரிய மற்றும் குழாய் இணைப்புடன் வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உள்ள சொத்து. **மனையின் எல்லைகள்: கிழக்கில்:** தெற்கு – வடக்கு தெரு, **மேற்கில்:** பொதுச்கூவர் மற்றும் சுப்நாயக்கருக்குச் சொந்தமான வீடு, **வடக்கில்:** பொது சந்து மற்றும் குருவம்மாளுக்குச் சொந்தமான வீட்டு மனை, **தெற்கில்:** கிழக்கு– மேற்கு சாலை. | Rs. 1153691.00/- (ரூபாய் பதினொரு லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்று மட்டும்) | Rs. 115369.10/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினைந்தாயிரத்து முந்நூற்று அறுபத்து ஒன்பது மற்றும் பத்து பைசா மட்டும்) | 18-02-2026 Before 5 PM | 10,000/- | 16-02-2026 (11AM – 4PM) | 19-02-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.63, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் – **ஆக்சன் டிரஸ்ட்ஸ்** A/C **என்ற** வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜிஐஜிஇ பேங்க் லிமிடெட், பன்ச்சில் டெக் பார்க், நியூ கணபதி சௌக், 43/44, வினன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 18.02.2026 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை முகவரி: கல்யாணி டவர்ஸ், எண்.21A/C, காபுர்கான் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு–642126, மேலும் செல்பேசி எண்.+918281138143, மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 19.01.2026 இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்



விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM